# மேட்டுப்பாளையம் நகராட்சி

30.07.2021ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு எதிராக திரு.கே.கோபிநாத் என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு எண்.WP No27319 of 2019க்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வக்காலத்து மற்றும் Counter பைல் செய்யவும் வழக்கில் எதிர்வாதிடவும் ஆகும் செலவினம் ரூ.15,000/—ஐ வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர்திரு.எஸ்.என்.பார்த்தசாரதி அவர்கள் கோரியுள்ளார். எனவே, மேற்படி செலவினம் ரூ.15,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3226/2019/எப்1 |
| 2 | இந்நகராட்சக்கு எதிராக திரு.சரவணக்குமார் (இந்தியன் நேஷனல் ரியல் எஸ்டேட் பில்டர் லேண்ட் டெவலப்பர்ஸ்) என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு எண். WP No26355/ 2019 வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வக்காலத்து மற்றும் Counter பைல் செய்யவும் வாதாடவும் ஆகும் செலவினம் ரூ.15,000/—ஐ வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர்திரு.எஸ்.என்.பார்த்தசாரதி அவர்கள் கோரியுள்ளார். எனவே, மேற்படி செலவினம் ரூ.15,000/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3319/2019/எப்1 |
| 3 | பார்வை : ந.க.எண்.01588/ நாள்.06.07.2021<br>பார்வையில் கண்டுள்ள கடிதத்தின் அடிப்படையில் அன்னூர் சாலை நகராட்சி துவக்கப் பள்ளியின் வளாகத்தில் வகுப்பறை ஒட்டி நடுர் நகரவை துவக்கப்பள்ளியின் பழைய சத்துணவு கட்டிடம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது அக்கட்டிடத்திற்குள் விஷப்பூச்சிகள் நடமாட்டம் இருப்பதாலும் சிதலமடைந்து பயன்பாடு அற்ற கட்டிடத்தினை இடித்து குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் படி அப்பள்ளியின் தலைமை ஆசிரியை கேட்டுள்ளார்.<br>இதன் அடிப்படையில் நகராட்சியின் விதிகளுக்கு உட்பட்டு குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்கும் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொண்டு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1740/2021/இ1 |

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து Old Schemes, combined scheme மற்றும் New scheme என மூன்று திட்டங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. மேலும், நகராட்சி பகுதிகளுக்கு கே.கே.நகர், மணிநகர், பழைய நகராட்சி அலுவலகம், சங்கர் நகர், எஸ்.எம்.நகர், LIC நகர் மற்றும் பூஸ்டர் மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.<br>நீர் தேக்க தொட்டி பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகள் என்பதாலும் மேலும் பொதுமக்கள் நலன் கருதி இப்பகுதிகள் அனைத்திற்கும் காவலாளிகள் மூலம் காவல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.<br>தற்பொழுது நகராட்சி குடிநீர் பிரிவில் உள்ள குழாய் பணியாளர், மின் பணியாளர்கள் மற்றும் Fountain Cleaner ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது. நகராட்சியில் மூன்று திட்டங்கள் மூலம் 6 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் விநியோகம் செய்ய நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் மேற்கொள்ள கூடுதலாக 21 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் இவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர்,கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி ந.க.எண்.7457/2020/E3, நாள்.25.09.2020ல் நிர்ணயம் செய்யப்பட்ட கூலியுடன் ESI, EPF மற்றும் Insurance உடன் வழங்க உத்தேசமாக ரூ.9.90 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.294, நாள்.31.12.2020 முதல் அனுமதி பெறப்பட்டு 31.07.2021 வரை அப்பணிக்கான காலம் முடிவடைவதால் , மேலும் இப்பணிக்கு 01.08.2021 முதல் 89 நாட்களுக்கு குடிநீர் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இப்பணியின் அவசர அவசியம் கருதியும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணி குடிநீர் விநியோகப் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.268/2021/இ1 |
| 5 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40S 4549க்கு டயர் மற்றும் பேட்டரி புதிதாக பொருத்திட ஆகும் தோராய செலவினம் ரூ. 26,000க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.466/2021/எச்1 |
| 6 | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு, உரிமத்தொகை செலுத்தக் கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டதில். திரு.முகம்மது ரஃபிக் என்பவர் தனது வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பியுள்ளதற்கு நகராட்சி நிலை வழக்கறிஞர் மூலம் நகராட்சி சார்பாக பதில் நோட்டீஸ் தயார் செய்து அனுப்பிய வகையில் வழக்கறிஞர் கட்டணத் தொகையாக திரு.செந்தில்குமார் வழக்கறிஞருக்கு ரூ.2500/– வழங்கிடவும் மேலும், மேற்படி உரிம இனத்திற்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரை கோரிய வகையில் வழக்கறிஞர் கட்டணத் தொகையாக திரு.பி.ஆனந் வழக்கறிஞருக்கு ரூ.5000/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5403/2014/அ1 |
| 7 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Covid – 19 தொற்று நோய் பரவி வருவதை அடுத்து தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட நபர்கள் வசிக்கும் பகுதிகளை மாநில அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் அப்பகுதிகளை தடை செய்து அப்பகுதிகளில் உள்ள வீடுகளை தனிமைப்படுத்தி மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு தடுப்புகள் ஏற்படுத்தி பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இத்தடுப்பு பணிகள் அனைத்தும் பேரிடர் மற்றும் தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பணிகள் என்பதால் இப்பணிக்கு ரூ.60,000/–ஐ தயாரிக்கப்பட்டு இப்பணிகள் அனைத்தும் அவசர அவசிய பணிகள் என்பதால் இப்பணியினை நகராட்சி சட்டம் 1920 விதி 15ன் கீழ் மேற்கொண்டதினை மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1480/2020/இ1 |

| | |
|---|---|
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் உள்ள நெல்லித்துறை சாலையில் உள்ள மயானம், ராஜபுரம் மயானம், கெண்டையூர் பகுதியில் உள்ள மயானம், வெள்ளிப்பாளையம் சாலையில் உள்ள மயானம் ஆகியவற்றில் கோவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டு காலமானவர்களை கடந்த 1 $^{1/2}$ வருடங்களுக்கு மேல் புதைக்கப்பட்டும், எரியூட்டப்பட்டும் வந்தது. மேற்காண் மயானங்களில் இதுநாள் வரை சுத்தம் செய்யப்படாமல் இருந்து வந்தது. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் , கோவை அவர்களது உத்திரவில் மேற்காண் 4 மயானங்களை JCB மூலம் சுத்தப்படுத்த தெரிவித்துள்ளதையடுத்து மேற்படி பணி நகராட்சி சட்டம் 1920 வருடத்திய பிரிவு 15ன் கீழ் ரூ.40,000/– மதிப்பீட்டில் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். |
| 9 | மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் அறிவுரையில் தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தல் 2021, ஏப்ரல் 6 ஆம் தேதியில் நடைபெற உள்ளதால் அனைத்த வாக்குச்சாவடி மையங்களிலும் பொதுமக்கள் வாக்களிக்க ஏதுவாக அனைத்து அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். எனவே, அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் அத்தியாவசிய தேவைகளான குடிநீர், மின் இணைப்பு, சாய்வு தளம்(Ramp) மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ.6,00,000/– செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1840/2020/இ1 |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2020 – 2021ஆம் ஆண்டு (ந.க.எண்.ஆ3/2327/2020, நாள்.23.03.2020) ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர் –2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.400/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.08.2021 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.21,71,600/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1688/2016/எச்1 |
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சி 2020 – 2021 ஆம் ஆண்டின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 13.07.2021ன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் கணினிகள் பிரிண்டர்கள், ஸ்கேனர்கள் வருடாந்திர பராமரிப்பு (AMC) மேற்கொள்ளுதல் | ரூ.3.70 இலட்சம் | திருவாளர். Syscon System | ரூ.3,63,826/– |
| | | | திருவாளர்.Sagar Electronic | ரூ.3,73,600/– |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் Syscon System அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1365/2021/இ1

12 மேட்டுப்பாளையம் நகராட்சி பொதுநிதி 2020 – 2021ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 13.07.2021ன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கு Antivirus Software அமைத்தல் | ரூ.1.00 இலட்சம் | திருவாளர்.Sagar Electronics | ரூ.98,760/– |
| | | | திருவாளர். Syscon Systems | ரூ.1,05,000/– |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.Sagar Electronic அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1365/2021/இ1

13 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2020 – 2021ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 27.07.2021ன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் குழாய் திருப்பூர் பணி மற்றும் அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் காவலர் பணி மேற்கொள்ளுதல் | ரூ.9.90 இலட்சம் | திரு.எம்.வேலுசாமி | 0.002% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. சி.நாகராஜ் | 1.209% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.வேலுசாமி அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.268/2021/இ1

14 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2020 – 2021ம் ஆண்டின் கீழ்க்கண்ட பணிக்கு 13.07.2021ன் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திரு.கே.வேலுசாமி | 2.51% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.எம்.வேலுசாமி | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.வேலுசாமி அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் குடிநீர் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1345/2020/இ1

| | |
|---|---|
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2020 – 2021 கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 13.07.2021ன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | தலைமை நீரேற்று நிலையத்தில் பம்ப் பழுதுகள் அகற்றுதல் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான உதிரி சாமான்கள் வாங்குதல் | ரூ.3.14 இலட்சம் | திருவாளர்.Alchem Industries | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.Sree Power Engineers | 1.66% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.Alchem Industries அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் குடிநீர் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1209/2020/இ1

| | |
|---|---|
| 16 | இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் குத்தகை இனங்களில் ஏலம் போகாமல் காலியாக உள்ள இனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகைத் தொகையின் ஒரு வருட வாடகைத் தொகையை விட ஏல முன்வைப்புத்தொகை குறைவாக இருந்த காரணத்தினால் கீழ்க்காணும் விவரப்படி வைப்புத்தொகையை உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

I.

| வ. எண் | நகராட்சி கடைகள் அமைவிட விபரம் | கடை எண்கள் | ஏல டேவணித் தொகை ரூ. | உயர்வு செய்யப்பட்ட ஏல டேவணித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 1. குமரன் திடல் கடை, பேருந்து நிலையம் | 1 | 50,000 | 1,00,000 |
| | 2. அண்ணா வணிக வளாக கடைகள் | 12, 23 | 50,000 | 1,00,000 |
| | 3. பேருந்து நிலைய எம்.யு.டி.எப் மேல் மாடி கடைகள் | 1, ,11,12,13 மற்றும் 14 | 50,000 | 1,00,000 |
| 2 | அண்ணா தினசரி சந்தை கடைகள் | 12, 13 , 23 மற்றும்25 | 25,000 | 50,000 |
| 3 | பாரதியார் நூற்றாண்டுவிழா குடோன் | 1 முதல் 9 வரை | 25,000 | 50,000 |
| 4 | பாரதியார் நூற்றாண்டுவிழா கடைகள் | 1,2,3,4,5,6,8,9, 10, 11,12,13,14 மற்றும் 15 | 25,000 | 50,000 |
| 5 | எம்.யு.டி.எப். ஏ பிளாக் கடைகள் | 1, 3 , 4,5, 6, 7, 8, 9 மற்றும் 10 | 50,000 | உயர்வு செய்யப்படவில்லை |
| 6 | எம்.யு.டி.எப். பி பிளாக் கடைகள் | 1,2,5,6,9,10,11, 12,13 | 25,000 | |
| 7 | எம்.யு.டி.எப். சி பிளாக் கடைகள் | 1,2 | 25,000 | |

| | |
|---|---|
| | II. |

| வ. எண் | நகராட்சி கட்டிட அமைவிட விபரம் | ஏல டேவணித் தொகை ரூ. | கூடுதல் ஏல முன் வைப்புத் தொகை ரூ | உயர்வு செய்யப்பட்ட ஏல டேவணித் தொகை ரூ. | உயர்வு செய்யப்பட்ட கூடுதல் ஏல முன் வைப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி ஜவறர்லால் நேரு பேருந்து நிலையத்தில் உள்ள தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் | 50,000 | 50,000 | 1,00,000 | 1,00,000 |

III.

| வ. எண். | குத்தகை இன விபரம் | வைப்புத் தொகை | கூடுதல் வைப்புத் தொகை | உயர்வு செய்யப்பட்ட ஏல டேவணித் தொகை ரூ. | உயர்வு செய்யப்பட்ட கூடுதல் ஏல முன் வைப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | அண்ணா தினசரி காய்கறி சந்தைப்பேட்டையில் சுங்கம் வசூல் செய்தல் (ம) அரசு பொது மருத்துவமனைக்கு வடபுறமுள்ள அண்ணா நாளங்காடி தினசரி காய்கறி மார்க்கெட்டில் உள்ள காலியிடங்களுக்கு சுங்கம் வசூல் செய்தல் | 6,00,000 | 6,00,000 | 6,50,000 | 6,50,000 |
| 2 | ஜவஹர்லால் நேரு பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 8,00,000 | 8,00,000 | உயர்வு செய்யப்படவில்லை | |
| 3 | நகராட்சி எல்லைக்குட்பட்ட அருண்நகர் பகுதியில் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம் பின்புற 10×10 அளவுள்ள ஆர்சிசி மற்றும் 10×10 அளவுள்ள சிமெண்ட அட்டை மேற்கூரை கொண்ட கட்டிடம் | 1,00,000 | 50,000 | 50,000 | 50,000 |

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.780/2016/இ1

17 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40S 4549க்கு பேட்டரி & டயர்கள் பொருத்தும் பணிக்கு கடந்த 23.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | ரூ.26,000/– |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ.27,100/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.466/2021/எச்1

18 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40S **4549**க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த **23.07.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| **1** | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | **ரூ.72,000/–** |
| **2** | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | **ரூ.79,000/–** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.**465/2021**/எச்**1**

19 இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN40S **4582**க்கு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த **23.07.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| **1** | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | **ரூ.88,000/–** |
| **2** | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | **ரூ.96,500/–** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.**1195/2021**/எச்**1**

20 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.**3**ல் வெள்ளிப்பாளையம் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிடத்திற்கு போதிய தண்ணீர் வசதிகள் இல்லாத காரணத்தால் பொது மக்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் இந்த பொது கழிப்பிடத்திற்கு Plumbing மற்றும் சில மராமத்து பணிகள் மேற்கொண்டு இக்கழிப்பிடத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வர ரூ.**85,000/–**க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.**1846/2021**/எச்**1**

**21** மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016 நாள் : 24.02.2016 மற்றும் 18.07.20216ன் படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2016 நாள்.21.01.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விவரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண்.எச்1/494/2019 நாள்.10.02.2021ல் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், சுகாதாரப் பணிகள், பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 30.04.2021 வரை பணிகள் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.65 நாள் 26.05.2021 முதல் 31.07.2021 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. இவர்கள் மேலும் 01.08.2021 முதல் 31.08.2021 வரை ஒரு மாதத்திற்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.494/2019/எச்1

**22** மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட கல்விநிதி 2020 – 2021ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 29.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.32 மணிநகர் பள்ளி வளாகத்தில் மேம்பாட்டு பணிகள் செய்தல் | ரூ.6.00 இலட்சம் | திருவாளர்.G.K.S.சேதுபதி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 3.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.G.K.S.சேதுபதி அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1743/2021/இ1

**23** மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட கல்விநிதி 2020 – 2021ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 28.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணிகளின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.32 மணிநகர் பள்ளி வாளகத்தில் முதல் தளம் வகுப்பறை கட்டுதல் | ரூ.10.00 இலட்சம் | திருவாளர்.C.நாகாஜ் | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். M. வேலுசாமி | 3.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.20 நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மேம்பாட்டுப் பணிகள் செய்தல் | ரூ.9.50 இலட்சம் | திருவாளர் . V. செல்வராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் . N.ஜெகநாதன் | 4.15% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1742/2021/இ1

| | |
|---|---|
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பொதுநிதி 2020 – 2021ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 30.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள 32 மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.7.00 இலட்சம் | திருவாளர்.Sharp Systems | ரூ.7,00,000/– மதிப்பீட்டு தொகை |
| | | | திருவாளர்.Selvaram Enterprises | ரூ.7,20,000/– மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள 32 மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்களுக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.9.80 இலட்சம் | திருவாளர்.Sharp Systems | ரூ.9,80,000/– மதிப்பீட்டு தொகை |
| | | | திருவாளர்.Selvaram Enterprises | ரூ.10,21,705/– மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1823/2021/இ1

| | |
|---|---|
| 25 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 30.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.4 சங்கர் நகர் பகுதியிலுள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திரு.ஸ்ரீ ஆஸ்க்சுஷ்மா இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. C. நாகராஜ் | 4.01% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண்.22 காட்டூர் ரேஷன் கடை எதிரில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்திற்கு கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திரு . K. வேலுசாமி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு . M. வேலுசாமி | 3.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1744/2021/இ1

| | |
|---|---|
| 26 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட கோவிந்தபிள்ளை மயானத்தில் அமைந்துள்ள ரோட்டரி மேட்டுப்பாளையம் மயான அறக்கட்டளை தகனமேடையினை மேட்டுப்பாளையம் நகராட்சி சார்பில் மேட்டுப்பாளையம் ரோட்டரி சங்கம் அதனை எடுத்து இயக்கவும் பராமரிக்கவும், கடந்த 10.08.2011 முதல் பத்தாண்டுகளுக்கு நகர்மன்ற தீர்மான எண். 199 நாள். 18.08.2011ல் அனுமதி வழங்கப்பட்டது 18.08.2021ல் முடிவடைகிறது. ரோட்டரி மேட்டுப்பாளையம் மயான அறக்கட்டளை 09.03.2021 தேதியில் கோரியதற்கிணங்க மேலும் தொடர்ந்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்ப்பட்டு 19.08.2021 முதல் மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து இயக்கவும் பராமரிக்கவும், மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br>**<u>நிபந்தனைகள்.</u>**<br>1. மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான ரோட்டரி மேட்டுப்பாளையம் மயான அறக்கட்டளை நெல்லித்துறை ரோடு மயானத்தில் புதியதாக கட்டப்பட்ட எரிவாயு மயானத்தை 3 (மூன்று) ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்காக ரோட்டரி மேட்டுப்பாளையம் மயான அறக்கட்டளை (எரிவாயு தகன மேடை) அறக்கட்டளை ஏற்றுக் கொள்ளும்.<br>2. எரிவாயு மயானம், காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக் காரியங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கக் கூடாது.<br>3. ஒலி,ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை/நிறுவனம் பயன்படுத்தக் கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக, நகராட்சி நிர்வாக ஆணையர்/அவ்வப்போது வகுக்கும் ஆலோசனைகளுக்கும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் அறக்கட்டளை / நிறுவனம் கட்டுப்பட வேண்டும்.<br>4. மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே முழுப்பொறுப்பாகும்.<br>5. எரியூட்டும் இயந்திர புகைப்போக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயர்த்திலும் மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும்.<br>6. மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி தேவைப்படுமென கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லாச் சான்றை உள்ளாட்சி சொந்த பொறுப்பில் பெற்றுக் கொடுக்க வேண்டும்.<br>7. நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மன்றத் தலைவர் / ஆணையாளர் / செயல் அலுவலர், சுகாதார பிரிவு அதிகாரி மற்றும் நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம்.<br>8. தகனம் செய்யும் செலவு போக மீதயுள்ள தொகையில் 10 சதவீதத்தை நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.<br>9. ஜாதி , மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும்.<br>10. எரிவாயு மயானத்தைச் சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளும் தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தைச் சுற்றி மதிற்சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார்அறக்கட்டளை / நிறுவனம் ஏற்க வேண்டும்.<br>11. எரிவாயு மயானத்தில், அறக்கட்டளை / நிறுவனம் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ சடலம் அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது.<br>12. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சனைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும்.<br>13. பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 3 வருட காலத்திற்கு மட்டுமே எரிவாயு மயான பராமரிப்பு அறக்கட்டளை / தனியார் நிறுவன பராமரிக்க அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் ஆறு மாத காலத்திற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புள் புதுப்பித்து / நிராகரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும்.<br>14. பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல், கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்றே வேலைகள் செயல்படுத்த வேண்டும். பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும்பொழுது இதற்கு எந்தவித இழப்பீடும் உள்ளாட்சி வழங்காது.<br>15. அறக்கட்டளை / நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் மாநகராட்சி / நகராட்சிக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.<br>16. பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் உள்ளாட்சியின் முடிவை பொறுத்தது, அனுமதி மறுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட தனியார் அறக்கட்டளை / தனியார் நிறுவனங்கள், தாங்கள் நிறுவிய அனைத்து கூடுதல் உபகரணங்கள் / கட்டடங்களுக்கு எந்தவித இழப்பீடும் கோராமல் உள்ளாட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.<br>17. எரிவாயு மயானம் அமைக்க உரிமம் பெற்ற தனியார் நிறுவனம் / அறக்கட்டளை, இறந்தவரின் பெயர், தகப்பனார் / தாயார் பெயர், வயது, முகவரி, எரிவாயு மயானம் பயன்படுத்தப்பட்ட நாள் மற்றும் நேரம், பெறப்பட்ட தொகை முதலிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.<br>18. மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப் பத்திரம் உள்ளாட்சிக்கு அறக்கட்டளை / நிறுவனம் எழுதிக் கொடுக்க வேண்டும்.<br>19. மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.5080/2005/இ1 |